සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**93 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

විද්‍යුත් ලේඛනකරණය හා ලඝුලේඛනය (දෙමළ) I, II
மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்) I, II
Electronic Writing and Shorthand (Tamil) I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்) I

**அறிவுறுத்தல்கள்:**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** இலங்கையில் பாவிக்கும் சுருக்கெழுத்து முறை யாரால் எழுதப்பட்ட சுருக்கெழுத்து முறையினைத் தழுவி எழுதப்பட்டுள்ளது?
(1) இந்தியாவில் சுப்பிரமணியம் என்பவரால் எழுதப்பட்ட சுருக்கெழுத்து முறையைத் தழுவி ஈழத்து இராமலிங்கம் என்பவரால் எழுதப்பட்டுள்ளது
(2) இந்தியாவில் பிற்மன் முறையினைத் தழுவி சிறினிவாசகரால் எழுதப்பட்டுள்ளது
(3) பிராமிய எழுத்து அரிச்சுவடியைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது
(4) ஆங்கில அரிச்சுவடியைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது

**2.** பணிப்பாளர் கலைக்கூட்டத்தின் குறிப்புகளை சுருக்கெழுத்துக்களால் குறித்துக்கொண்ட தனிப்பட்ட செயலாளரின் குறிப்புகள் கொண்ட தாள்களில் சில இடந்தவறி வைக்கப்பட்டுவிட்டதனால் இறுதியறிக்கையைத் தயாரித்தல் தாமதமானது. எதிர்காலத்தில் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படாதிருப்பதற்காக அவர் பின்பற்ற வேண்டிய சிறந்த வழிமுறையானது
(1) தனியாக அல்லாது இருவர் சேர்ந்து கூட்டறிக்கையைக் குறித்துக் கொள்ளல்
(2) சுருக்கெழுத்துக் குறிப்புகள் எழுதப்பட்ட கடதாசித்தாள்களை ஒன்றாகச் சேர்த்து இணைத்து வைத்தல்
(3) ஒலிப்பதிவு உபகரணமொன்றைப் பயன்படுத்தி கூட்ட நிகழ்வுகளை ஒலிப்பதிவு செய்தல்
(4) கூட்ட அறிக்கை எழுதுவதற்குத் தனியான புத்தகமொன்றைப் பயன்படுத்தல்

**3.** ①.....................ஒரு சிங்கள சுருக்கெழுத்து முறையாவதுடன் ②..................... ஒரு ஆங்கில சுருக்கெழுத்து முறையாகும். மேற்படி ① மற்றும் ② இடைவெளிகளுக்கான சொற்கள் சரியாக முறையே காணப்படும் விடையைத் தெரிவுசெய்க
(1) கெண்டர், பிட்மன் (2) பிட்மன், லோரன்ஸ் (3) லோரன்ஸ், கெண்டர் (4) பிட்மன், ஸ்லோன்

**4.** சொற்களின் ஆரம்பத்தில் பக்கம் மாற்றிப் பயன்படுத்தப்படும் நீளச் சுழியினைப் பயன்படுத்தி எழுதப்படும் சரியான சொல் ஒன்றினைத் தருக.
(1) கரியடுப்பு (2) காறுதல் (3) கேரள (4) சுருக்கு

**5.** அலுவலகமொன்றிற்கு வெளியிலிருந்து கிடைக்கும் கடிதங்களுக்கு முதலில் என்ன செய்ய வேண்டும்?
(1) திகதி முத்திரையிட்டு ஆவணப்படுத்தலாகும்.
(2) கிடைக்கும் கடிதங்களைப் பெட்டியிலிடுதலாகும்.
(3) உரிய கோப்புகளில் கோவைப்படுத்தலாகும்.
(4) உரிய அதிகாரிகளிடம் முன்வைத்தலாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

**6.** ஒரு பண்டைய எழுத்து முறையானது
(1) பயிற்சிப் புத்தகங்களில் எழுதுதல் (2) ஓலைச் சுவடிகளில் எழுதுதல்
(3) சுண்ணாம்புப் பலகையில் எழுதுதல் (4) தட்டச்சிடல்

**7.** மெமோ தாளொன்று எப்போதும்
(1) சம முகாமைத்துவ மட்டத்திலுள்ள முகாமையாளர்களுக்கிடையே தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுவதற்குப் பயன்படுத்தப்படும்.
(2) ஒரு நிறுவனத்தின் உயர் முகாமையாளர்கள் மற்றும் வேறொரு நிறுவனத்தின் உயர் முகாமையாளர்களுக்கிடையே பரிமாறிக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும்.
(3) விவரமான தகவல்களை அறிவிப்பதற்காக நிறுவனத்துள் பரிமாற்றப்படும்.
(4) நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்திலிருந்து கீழ் முகாமைத்துவத்திற்கு தகவல்களை அறிவிப்பதற்காக பயன்படுத்தப்படும்.

**8.** சுருக்கெழுத்தில் வேக வளர்ச்சிக்கு உகந்ததாகக் கருதப்படுவது
(1) அலகுகள் (2) வளை கோடுகள்
(3) வெவ்வேறுபட்ட சுழிகள் (4) நேர் கோட்டு அலகுகள்

**9.** சுருக்கெழுத்தில் வரியை வெட்டி எழுதப்படும் நேர்கோட்டினால் பெறப்படும் சரியான சொல் எது?
(1) மிடுக்குடன் (2) கீரைவகை (3) மாடிவீடு (4) புடவைத் தொழில்

**10.** தட்டச்சில் மனை வரிசையில் இடது கை விரல் வலது கை விரல்களைப் பயன்படுத்தி தட்டச்சு செய்யப்பட்டுள்ள சரியான சொல் வரிசை எது?
(1) பாகு, தட்டு, தும்மு, முதுகு, பயம்
(2) முதுகு, வசி, மாடம், படகு, பாழ்
(3) வசி, சதி, புலி, நடை, சிறை
(4) பணு, சிறை, காசி, குறடு, முத்து

**11.** தட்டச்சில் மனை வரிசை, மேல் வரிசை, கீழ் வரிசை ஆகியவற்றைப் பயன்படுத்தி தட்டச்சு செய்தால் வரும் சரியான சொற்கள்
(1) பகை, சிதை, காசி (2) கட, கது, கள்
(3) பாகு, பாட, மது (4) தட, பாகு, பட்ட

**12.** கணினியில் தயாரிக்கப்பட்டுள்ள ஆவணமொன்றில், பக்கத்தின் மேல்புறமாக இலக்கமிடல் வேண்டும். இதற்காகப் பயன்படுத்த வேண்டிய படவுரு (icon) யாது?

(1)  (2)  (3)  (4) 

**13.** ஆவணமொன்றில் 1, 2, 3 என இலக்கமிடப்பட்டுள்ள அராபிய இலக்கங்களை i, ii, iii என்னும் உரோம இலக்கங்களாக மாற்றுவதற்கான தேவை ஷெகானுக்கு ஏற்பட்டது. இதற்காகப் பயன்படுத்த வேண்டிய படவுருவைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3)  (4) 

**14.** ஆவணத்தில் அனைத்துப் பக்கங்களிலும் இடப்பட்டிருந்த பக்க இலக்கங்களை அகற்றுவதற்கு வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்காகப் பயன்படுத்த வேண்டிய படவுருவைத் தெரிவுசெய்க.

(1)  (2)  (3)  (4) 

**15.** கணினியில் தயாரித்துக் கொண்டிருந்த அறிக்கையின் முதலாவது பந்தியின் முதல் எழுத்தை மாத்திரம் பெரிதாக்கிக் காட்டல் அவசியமாகும். இதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய படவுருவைத் தெரிவுசெய்க.

(1)  (2)  (3)  (4) 


[பக். 3 ஐப் பார்க்க

**16.** கணினியில் தயாரித்துக் கொண்டிருந்த ஆவணத்தில் உள்நுழைக்கப்பட்ட படத்தின்மீது வாசகமொன்றை (text) எழுத வேண்டியேற்பட்டது. அதற்காகப் பயன்படுத்தப்படவேண்டிய படவுருவைத் தெரிவுசெய்க.

(1)  (2)  (3)  (4) 

**17.** விற்பனை நிலையத்திலிருந்து கொள்வனவு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட இரு பட்டியல்கள் பின்வருமாறு

| பட்டியல் **A** | பட்டியல் **B** |
|---|---|
| • அரிசி | 1. சவர்க்காரம் |
| • தேங்காய் | 2. பவுடர் |
| • சீனி | 3. தந்தாலேப |
| • மா | 4. பற்தூரிகை |

மேற்படி A பட்டியல் மற்றும் B பட்டியலைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள படவுருக்களை முறையே காட்டும் விடைகளைத் தெரிவுசெய்க.

(1)  மற்றும் 

(2)  மற்றும் 

(3)  மற்றும் 

(4)  மற்றும் 

● பின்வரும் படவுருக்களைப் பயன்படுத்தி **18,19** ஆகிய வினாக்களுக்கு விடை தருக


**A**


**B**


**C**


**D**

**18.** விரிதாளொன்றில் (Spreadsheet) B2 கலத்திலிருந்து B8 கலம் வரையுள்ள அனைத்து கலங்களும் ஒருகலமாகும் வகையில் சேர்க்க வேண்டும். அப்பணியை மேற்கொள்ளக்கூடிய படவுருக்களை மாத்திரம் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) **A** மற்றும் **B** மாத்திரமாகும் (2) **A** மற்றும் **D** மாத்திரமாகும்
(3) **B** மற்றும் **D** மாத்திரமாகும் (4) **A, B** மற்றும் **D** மாத்திரமாகும்

**19.** விரிதாளொன்றின் ஒரு நிரையிலுள்ள கலங்கள் (cells) சிலவற்றை ஒரு கலமாகத் தயாரிக்க வேண்டி உள்ளது. அதற்காகப் பயன்படுத்தப்பட <u>முடியாத</u> படவுரு எது?

(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

**20.** கணினியில் தயாரிக்கப்பட்டு பிழைதிருத்தத்திற்காக முன்வைக்கப்பட்ட ஆவணமொன்றில் காணப்படும் சொல்லொன்றின் நடுவே ⁄ # என்னும் செவ்வை பார்த்தல் குறியீடு இடப்பட்டிருந்தது.
அத்திருத்தத்தை கணினி மூலம் செய்வதற்காக சொல்லின் நடுவில் நிலைகாட்டியை (cursor) வைத்து

(1) Enter key ஐ ஒருமுறை அழுத்த வேண்டும்.
(2) Delete key ஐ ஒருமுறை அழுத்த வேண்டும்.
(3) Backspace key ஐ ஒருமுறை அழுத்த வேண்டும்.
(4) Space bar ஐ ஒருமுறை அழுத்த வேண்டும்.

**21.** பிழை திருத்தத்திற்காக முன்வைக்கப்பட்ட ஆவணமொன்றில் ஒரு சொல் தனிக்கோட்டால் வெட்டப்பட்டு அச்சொல்லின் கீழ் புள்ளிகள் வரிசையொன்று இடப்பட்டிருந்தது. (உதாரணம் : ~~அடைப்புக்குறி~~)
இச் செவ்வை பார்த்தல் குறியீட்டின் கருத்தானது

(1) அச்சொல்லை வெட்டியகற்றல் வேண்டும் என்பதாகும்.
(2) சொல்லின் இறுதியில் புள்ளியிடல் வேண்டும் என்பதாகும்.
(3) சொல் தனிக்கோட்டால் வெட்டப்பட்டும் அவ்விடத்திலேயே இருத்தல் வேண்டும் என்பதாகும்.
(4) சொல்லில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது என்பதாகும்.

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **22, 23** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

நிறுவனமொன்றில் 2025 ஜனவரி மாதம் சில்லறைக் காசேட்டில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா. 5 400 ஆகும். 2025 ஜனவரி மாதம் 31ம் திகதி சில்லறைக் காசேட்டுப் பொறுப்பாளரிடம் மிகுதியாக ரூபா. 600 காணப்பட்டது. 2025 பெப்ரவரி 28ம் திகதி சில்லறை காசேட்டுப் பொறுப்பாளரிடம் மிகுதியாக இருந்த பணம் 800 ரூபாவாகும்.

**22.** 2025 பெப்ரவரி மாதம் சில்லறைக் காசேட்டில் செலவிடப்பட்ட பணம் எவ்வளவு?
(1) ரூ. 600 (2) ரூ. 5 200 (3) ரூ. 5 400 (4) ரூ. 6 000

**23.** நிறுவனத்தில் முற்பணமுறை சில்லறைக் காசேட்டுப் பெறுமதி யாது?
(1) ரூ. 800 (2) ரூ. 5 200 (3) ரூ. 5 400 (4) ரூ. 6 000

● அச்சு (print) உரையாடல் பெட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதி பின்வருமாறு. அதனை அவதானித்து **24, 25** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




**24.** ஆவணத்தின் அனைத்துப் பக்கங்களையும் அச்சிட வேண்டுமா அல்லது தெரிவு செய்யப்பட்ட சில பக்கங்களை மாத்திரம் அச்சிட வேண்டுமா என்னும் அச்சிடல் கட்டளைகளை வழங்கக் கூடியது
(1) **A** மற்றும் **C** மூலமாகும். (2) **A** மற்றும் **D** மூலமாகும்.
(3) **A** மற்றும் **E** மூலமாகும். (4) **D** மற்றும் **E** மூலமாகும்.

**25.** ஆவணத்தின் பக்கங்களை அச்சிட வேண்டிய அச்சு இயந்திரத்தை தெரிவு செய்வது
(1) **B** மூலமாகும். (2) **C** மூலமாகும்.
(3) **B** மற்றும் **C** மூலமாகும். (4) **C** மற்றும் **D** மூலமாகும்.

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **26** தொடக்கம் **28** வரையான வினாக்களுக்கு விடை தருக.

சலனி முன்னணி கம்பனியொன்றின் பிரதான நிறைவேற்று அதிகாரியான கமல் பெரேராவின் தனிப்பட்ட செயலாளராவார். மதுகா மற்றும் தினிதி என்போர் அலுவலகத்தில் தொலைபேசி அழைப்புகளைப் பெறுதல் மற்றும் அவற்றிற்குப் பதிலளிக்கும் அலுவலக அனைத்து கோப்புகளுக்கும் பொறுப்பாயுள்ள முகாமைத்துவ உதவியாளர்களாவர். ரோகண அலுவலக நடவடிக்கைகளில் உதவும் அலுவலக உதவியாளராவார். இரவு நேர சேவையில் ஈடுபடும் சேபால கம்பனியின் காவலாளியாவார்.

**26.** மேற்படி கம்பனியில் சேவை செய்யும் சலனியின் சகபாடி / சகபாடிகள் ஆவோர்
(1) மதுகா மாத்திரமாகும். (2) ரோகண மாத்திரமாகும்.
(3) மதுகா மற்றும் ரோகண மாத்திரமாகும். (4) மதுகா மற்றும் தினிதி மாத்திரமாகும்.

**27.** மேற்படி கம்பனியில் சேவை செய்யும் ரோகண, சலனியின்
(1) சகபாடியாவார். (2) இளையவராவார்.
(3) உயரதிகாரியாவார். (4) தலைவராவார்.

**28.** சலனியின் உயரதிகாரியை மற்றும் கீழ் ஊழியர் ஒருவரை முறையே குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
(1) கமல் பெரேரா மற்றும் சேபால (2) ரோகண மற்றும் கமல் பெரேரா
(3) தினிதி மற்றும் ரோகண (4) கமல் பெரேரா மற்றும் மதுகா

[பக். 5 ஐப் பார்க்க

**29.** சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளில் நிரல்கள் கொண்டதாக தயாரிக்கப்பட்ட கடிதமொன்று தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) சமனாக அகலமுள்ள நிரல்களாக மாத்திரம் பக்கத்தைத் தயாரிக்கலாம்.
(2) தற்போது நிரல்களுடன் கூடிய ஆவணத்தை மாத்திரம் நிரல்களாக வேறுபடுத்தலாம்.
(3) முழுப்பக்கத்தையும் தனி நிரலாகத் தயாரித்துள்ள ஆவணத்தை மீண்டும் நிரல்களாக வேறுபடுத்தலாம்.
(4) ஒரு பக்கத்தில் நிரலுடன் கூடிய ஆவணத்தில் சகல நிரல்களுக்கு இடையில் சமனான அகலத்தில் இடைவெளி இருக்க வேண்டும்.

**30.** விரிதாள் திரையில் தயாரிக்கப்பட்ட தரவு அட்டவணையொன்றைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வரைபுக் குறிப்பு தொடர்பான கூற்றுகள் சில வருமாறு.
A – தரவு அட்டவணையின் எந்தவொரு தரவையும் மாற்றியவுடன், வரைபும் அதன்படி மாற்றமடையும்.
B - Insert ⟶ chart மூலம் பல்வேறுவகையான வரைபுகளைத் தெரிவு செய்யலாம்.
C - ஒரு தரவு அட்டவணைக்காக நிர்மாணிக்கக் கூடியது ஒரு வரைபுக்குறிப்பு மாத்திரமே.
மேற்படி கூற்றுகளில்
(1) கூற்று A மாத்திரம் சரியானது.
(2) கூற்று B மாத்திரம் சரியானது.
(3) கூற்றுகள் A, B ஆகியன மாத்திரம் சரியானவை.
(4) கூற்றுகள் A, B, C ஆகிய மூன்றும் சரியானவை.

**31.** அரச பிரிவு, தனியார் பிரிவு ஊழியர்கள் சிலருக்குரிய சட்டங்கள் பின்வருமாறு
A - அங்காடி மற்றும் அலுவலக ஊழியர் சட்டம்
B - ஊழியர் சேமலாப நிதிச் சட்டம்
C - சேவையில் உள்ளோரின் நிதியச் சட்டம்
D - விதவைகள் மற்றும் தபுதாரர் ஓய்வூதியச் சட்டம்
ஊழியரின் பங்களிப்பின்றி சேவை கொள்வோரின் பங்களிப்புடன் மாத்திரம் மேற்கொள்ளப்படும் நிதியம் யாது?
(1) A (2) B (3) C (4) D

**32.** தொடர்பாடல் செயன்முறையைக் காட்டும் வரிப்படமொன்று கீழே தரப்பட்டுள்ளது.




மேற்படி வரிப்படத்தின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.
(1) ஊடகம் (2) கடிதம் (3) தொடர்பாடல் (4) துலங்கல்

**33.** வெளிநாடொன்றின் கல்வி நிறுவனத்திற்கு உமது கல்விச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை மிகத் துரிதமாக அனுப்புவதற்கு மிகப் பொருத்தமான முறை யாது?
(1) கூரியர் முறை (2) மின்னஞ்சல் முறை
(3) விமான அஞ்சல் முறை (4) பெக்ஸ் முறை

**34.** விரிதாளொன்றின் (Spreadsheet) Q75 கலத்தில் வேலை செய்து கொண்டிருக்கும்போது ஒரே தடவையில் A1 கலத்தில் பிரவேசிக்க வேண்டியுள்ளது. இதற்காகப் பயன்படுத்த வேண்டிய குறுக்குவழிச் சாவிச் சேர்மானம்
(1) Alt + Home key (2) Ctrl + Home key (3) Home key (4) Page up key

● கீழே தரப்பட்டுள்ளது விரிதாளொன்றின் தெரிவுசெய்யப்பட்ட பகுதியாகும். இதனைப் பயன்படுத்தி **35, 36** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




[பக். 6 ஐப் பார்க்க

**35.** மேற்படி தெரிவுசெய்த பகுதியில் காணப்படும் விசேட பண்புகள் மாத்திரம் காணப்படும் விடையைத் தெரிவுசெய்க.
(1) பெயர் பெட்டி, வரிசைப் பெயர், நிரற்பெயர், கிடையான சுருள்பட்டி
(2) பெயர் பெட்டி, நிலைக்குத்தான சுருள்பட்டி, பணித்தாள் தத்தல், சூத்திரப்பட்டி
(3) வரிசைப் பெயர், நிரற்பெயர், நிலைக்குத்தான சுருள்பட்டி, பணித்தாள் தத்தல்
(4) பெயர் பெட்டி, வரிசைப் பெயர், நிரற்பெயர், சூத்திரப்பட்டி

**36.** மேற்படி விரிதாளின் தெரிவு செய்த பகுதியினால்
(1) தெரிவு செய்யப்பட்ட கலம் B23 ஆகும்.
(2) கலவீச்சு தெரிவாகியுள்ளது.
(3) பணித்தாளின் பெயர் B23 ஆகும்.
(4) A நிரல் முதல் F நிரல்வரை அனைத்து நிரல்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

**37.** விரிதாளொன்றின் தெரிவுசெய்த பகுதியொன்று கீழுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.




மேற்படி படம் தொடர்பான **பிழையான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) B1 கலத்திலிருந்து B5 கலம் வரையான அனைத்து கலங்களிலும் காணப்படும் பெறுமானங்களின் கூட்டுத்தொகை B10 கலத்திற்குப் பெறப்பட்டுள்ளது.
(2) B1 கலத்திலிருந்து B5 கலம் வரையான அனைத்துக் கலங்களினதும் பெறுமானங்களின் சராசரிப் பெறுமானத்தையும் கணக்கிடலாம்.
(3) =sum(B1:B5) என்பது இந்த விரிதாளின் எந்தவொரு கலத்திலும் எழுதக் கூடிய சூத்திரமாகும்.
(4) B1 கலத்திலிருந்து B5 கலம் வரையான எந்த கலத்திலும் காணப்படும் பெறுமானத்தை மாற்றினாலும் சரியான கூட்டுத்தொகை B10 கலத்தில் பெறப்படும்.

**38.** விரிதாளொன்றின் Z நிரலின் வலதுபக்கத்தில் உள்ள நிரலின் பெயர் யாது?
(1) AA (2) AZ (3) BA (4) ZA

**39.** விரிதாளொன்றின் D1 கலத்தில் எழுதப்பட்டுள்ள பெறுமானத்திலிருந்து D10 கலத்தில் உள்ள பெறுமானத்தைக் கழித்து D11 கலத்தில் பெறவேண்டியுள்ளது. D11 கலத்தில் எழுதவேண்டிய சூத்திரம் யாது?
(1) =sub(D1–D10) (2) =D10–D1 (3) =D1–D10 (4) D11=D1–D10

**40.** விரிதாள்களுடன் தொடர்புடைய இரண்டு கூற்றுகள் பின்வருமாறு.
A – = C1/5 Enter இடுவதன் மூலம் C1 கலத்தில் உள்ள பெறுமானங்கள் 5 ஆல் வகுக்கப்பட்டு விடை கிடைக்கும்.
B – = min(C1:C8) Enter இடுவதன் மூலம் C1 கலத்திலிருந்து C8 கலம் வரையான பெறுமானங்களின் உச்சளவு பெறுமானம் பெறப்படும்.

மேற்படி A மற்றும் B தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) A மற்றும் B கூற்றுகள் இரண்டும் சரியானவை
(2) A சரியானதாக அமைவதுடன் B பிழையானதாகும்
(3) A பிழையானதாக அமைவதுடன் B சரியானதாகும்
(4) A மற்றும் B கூற்றுகள் இரண்டும் பிழையானவை

* *

[பக். 7 ஐப் பார்க்க

ஸியலு ம ஹிமிகம் ஆவிரிணி / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**93 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

විද්‍යුත් ලේඛනකරණය හා ලඝුලේඛනය (දෙමළ) I, II
மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்) I, II
Electronic Writing and Shorthand (Tamil) I, II

## மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்) II

* முதலாம் வினா உட்பட **I, II, III** ஆகிய பகுதிகளிலிருந்து ஆகக் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

1. (i) தற்காலத்தில் சுருக்கெழுத்து பயன்படுத்தப்படும் நிறுவனங்களுக்கு **நான்கு** உதாரணங்கள் எழுதுக.

(ii) தொழிலொன்றைப் பெறுவதற்காகப் முன்வைக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் நீர் முன்வைக்கும் **நான்கு** விடயங்களை எழுதுக.

(iii) அலுவலகங்களுக்கிடையே கடமை நிமித்தம் பரிமாறப்படும் கடிதங்களில் நீர் அவதானிக்கும் வழு அல்லது குறைபாடுகள் **நான்கு** எழுதுக.

(iv) கணினி முறைமையொன்றில்
(அ) வன்பொருள் **இரண்டையும்** பெயரிடுக.
(ஆ) மென்பொருள் **இரண்டையும்** பெயரிடுக.

(v) வகுப்பாசிரியர் வகுப்பு மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுள்ள புள்ளிகளை எக்சல் (Excel) விரிதாளில் (Spreadsheet) உள்நுழைத்து ஒவ்வொரு மாணவரதும் மொத்தப்புள்ளிகளையும் சராசரிப்புள்ளிகளையும் கணக்கிட்டார். பின்பு அவர் மாணவர்கள் பெற்ற புள்ளிகளை சராசரிக்கமைய இறங்கு வரிசையில் ஒழுங்குபடுத்தினார். இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட கணினி உள்ளீடுகள், முறைவழிப்படுத்தல், வெளியீடுகள் என்பவற்றைத் தனித்தனியாக எழுதுக.

(vi) மேற்படி (v)ல் தயாரித்த தகவல்களுக்குரிய தரவு உள்ளீட்டுச் சாதனமொன்றையும் தரவு வெளியீட்டு சாதனமொன்றையும் எழுதுக.

(vii) (அ) இணைய வசதிகள் காரணமாக கல்வித்துறைக்குக் கிடைக்கும் பயன்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.
(ஆ) இணைய பயன்பாட்டின் காரணமாக ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்குக் கிடைத்துள்ள நன்மைகள் **இரண்டை** எழுதுக.

(viii) அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தலைவர்கள் பல்வேறு பதவிப் பெயர்களில் அழைக்கப்படுவார்கள்.
(அ) அரசு அல்லது தனியார் பிரிவு நிறுவனங்கள் **இரண்டின்** பெயர்களை எழுதுக.
(ஆ) மேற்படி (viii) (அ) ல் நீர் குறிப்பிட்ட ஒவ்வொரு நிறுவனங்களினதும் தலைவர்களின் பதவிப் பெயர்களை எழுதுக.

(ix) மைக்ரோசொப்ட் எக்சல் பணித்தாளில் B3 கலத்திலிருந்து B12 கலம்வரை பத்து மாணவர்களின் கணிதபாடப் புள்ளிகளும் C3 கலம் முதல் C12 கலம் வரை விஞ்ஞானப் பாடத்திற்கான புள்ளிகளும் உள்நுழைக்கப்பட்டுள்ளன.
(அ) B3 கலத்தில் காணப்படும் பெறுமானத்துடன் C3 கலத்தில் காணப்படும் பெறுமானத்தைக் கூட்டி D3 கலத்தில் புகுத்துவதற்கு D3 கலத்தில் எழுதவேண்டிய சூத்திரத்தை எழுதுக.
(ஆ) D3 கலத்தில் காணப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகை 100 அல்லது அதைவிட அதிகமாயின் சித்தி (Pass) எனவும் அவ்வாறு இல்லாவிட்டால் சித்தியின்மை (Fail) எனவும் E3 கலத்தில் குறிப்பிட வேண்டும். இதற்காக E3 கலத்தில் எழுதவேண்டிய சூத்திரத்தை எழுதுக.

(x) கணினி சாவிப்பலகையில் மனைச் சாவி வரிசை மற்றும் கீழ் வரிசையை மாத்திரம் பயன்படுத்தி எழுதக்கூடிய குறைந்தது **நான்கு** சொற்கள் கொண்ட அர்த்தமுள்ள வசனமொன்றை எழுதுக.

**(02 ×10 = 20 புள்ளிகள்)**

[பக். 8 ஐப் பார்க்க

## பகுதி I - செயலக நடைமுறை

**2.** தரம் 10 வகுப்பில் 21 பெண்பிள்ளைகளும் 18 ஆண் பிள்ளைகளும் கல்வி கற்கின்றனர். ஒரு நாள் நான்கு மாணவிகள் பாடசாலைக்கு வருகை தரவில்லை. ஆண் பிள்ளைகள் 17 பேர் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

(i) மேற்படி தகவல்களை உள்நுழைத்து, பூரணமாக தயாரிக்கும் அட்டவணையின் நிரல்களின் எண்ணிக்கை மற்றும் நிரைகளின் எண்ணிக்கையைத் தனித்தனியாக எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) மேற்படி (i) இல் குறிப்பிட்ட நிரைகளின் எண்ணிக்கை மற்றும் நிரல்களின் எண்ணிக்கை கொண்ட அட்டவணையைத் தயாரித்து அன்றைய தினம் தரம் 10 மாணவர்களின் வருகை தொடர்பான தகவல்களை உள்நுழைக்கவும். (02 புள்ளிகள்)

(iii) மேற்படி (ii) இல் தயாரித்த அட்டவணையை கணினியைப் பயன்படுத்தி தயாரிக்கும் முறையை படிமுறைகளாக எழுதுக. (04 புள்ளிகள்)

(iv) நிறுவனமொன்றில் பொதுவாக அட்டவணைப்படுத்தி முன்வைக்க வேண்டியேற்படும் தகவல்களுக்கு **இரண்டு** உதாரணங்கள் எழுதுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**3.** பின்வரும் கடிதத்தின் உதவியுடன் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினாக்களுக்கு விடை தருக.

> செயலாளர்
> நலன்புரி சங்கம்,
> விஜே வித்தியாலயம்
> 2025.03.20
>
> அனைத்து அங்கத்தவர்களுக்கும்
>
> பொதுச் சபைக் கூட்டத்திற்கான அழைப்பிதழ்
>
> பாடசாலை நலன்புரிச் சங்கத்தின் பொதுச் சபைக்கூடட்த்திற்கு மிக அவசரமாக அழைப்பு விடுப்பதற்குத் தீர்மானிக்கப்பபட்டுள்ளதுடன், அது 2025.03.31 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு பிரதான மண்டபத்தில் இடம்பெறும். இத்தினத்தில் விசேட பல விடயங்கள் கலந்துரையாடப்பட வேண்டியுள்ளதால் உங்கள் அனைவரதும் வருகையை கௌரவத்துடன் எதிர்பார்க்கிறோம்.
>
> இவ்வண்ணம்
> கௌரவ செயலாளர்

(i) (அ) மேற்படி கடிதத்தின் மென்பிரதி (soft copy) உரிய செம்மைப்படுத்தலுக்காக வழங்கப்பட்டுள்ளதெனக் கருதவும். நீர் அதன்போது செய்யும் செம்மைப்படுத்தல்கள் **இரண்டை** எழுதுக.

(ஆ) மேற்படி (i) (அ) இல் நீர் எழுதிய செம்மையாகத் தாக்கங்களை கணினியின் துணையுடன் கடித்தத்தின் திருத்தங்களை மேற்கொள்ளும் விதத்தை விளக்குக. (03 புள்ளிகள்)

(ii) மேற்படி கடிதத்தை தட்டச்சிடுவதற்காக கணினியின் சாவிப்பலகையில் நீர் பயன்படுத்த வேண்டிய சாவி வகைகள் எவை? (02 புள்ளிகள்)

(iii) கடிதத்தை கைகளால் எழுதுவதைவிட அதனை கணினியில் தயாரிப்பதனால் பெறக்கூடிய பயன்கள் **இரண்டு** எழுதுக. (02 புள்ளிகள்)

(iv) மேற்படி கடிதம் உரித்தாகும் தொடர்பாடல் ஊடகம் மற்றும் தொடர்பாடல் முறையைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(v) நீர் செம்மைப்படுத்திய கடிதத்தை நீர் கணிணியில் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தும் முறையை எழுதுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

[பக். 9 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki'

## பகுதி II - மின் ஆவணப்படுத்தல்

**4.** பின்வரும் சொல்முறைவழிப்படுத்தல் திரையின் படக்குறிப்புகளைக் கவனத்திற்கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக




(i) மேற்படி A, B, C, D, E, F, G, H, I மற்றும் J ல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை அல்லது படவுருக்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) மேற்படி (i) ல் நீர் அறிந்துகொண்ட பகுதியினால் அல்லது படவுருக்களில் சொல்முறை வழிப்படுத்தும் போது பெறக்கூடிய நன்மையை எழுதுக. (05 புள்ளிகள்)

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**5.** விற்பனை நிலையமொன்றில் விரித்தாள் திரையில் தயாரிக்கப்பட்ட இரசீதொன்று பின்வருமாறு. அதனைக் கருத்திற்கொண்டு கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடைதருக.

| | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | செனவிரத்ன அன் சன்ஸ்- அநுராதபுரம் | | | | | | |
| 2 | | தொடர் எண் | அலகுகள் எண்ணிக்கை | பொருள் வகை | அலகு விலை | பெறுமதி | |
| 3 | | 1 | 120 | சேலை | | 1800.00 | |
| 4 | | 2 | 25 | காற்சட்டை | | 2200.00 | |
| 5 | | 3 | 25 | சேர்ட் | | 1500.00 | |
| 6 | | 4 | 60 | கைத்துடைப்பான் | | 200.00 | |
| 7 | | 5 | 60 | தொப்பி | | 300.00 | |
| 8 | | | | கூட்டுத்தொகை | | | |
| 9 | | | | கழிவு 10% | | | |
| 10 | | | | இறுதிப்பெறுமதி | | | |

(i) இரசீதில் குறிப்பிடப்பட்ட 120 சேலைகளில் பெறுமதியை F4 கலத்தில் பெறுவதற்காக F4 கலத்தில் உள்நுழைக்ககூடிய சார்பை எழுதுக. (01 புள்ளி)

(ii) ஏனைய பொருட்களுக்குரிய பெறுமதிகளை F5 கலத்திலிருந்து F8 கலம்வரை பெற்றுக்கொள்வதற்கு மிக இலகுவான முறையை எழுதுக. (01 புள்ளி)

(iii) இரசீதின் கூட்டுத்தொகையை F9 கலத்தில் பெற்றுக்கொள்வதற்காக F9 கலத்தில் நீர் உள்நுழைக்கக் கூடிய இரண்டு சூத்திரங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(iv) இரசீதிற்கான கழிவை F10 கலத்தல் பெறவேண்டும். அதற்காக F10 கலத்தில் எழுதவேண்டிய சூத்திரத்தை எழுதுக. (02 புள்ளிகள்)

[பக். 10 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

(v) இரசீதின் இறுதிப் பெறுமானம் கணக்கிட வேண்டியது இரசீதின் கூட்டுத் தொகையிலிருந்து கழிவை கழித்து விடுவதன் மூலமாகும். அதனை F11 கலத்தில் பெறுவதற்கு F11 கலத்தில் எழுத வேண்டிய சூத்திரத்தை எழுதுக. (02 புள்ளிகள்)

(vi) இரசீதின் அனைத்து கோடுகளும் காணத்தக்கதாக தயாரிக்கப்பட்டது எவ்வாறு எனக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## பகுதி III - சுருக்கெழுத்து

**6.** நீங்கள் கற்ற சுருக்கெழுத்து முறைக்கமைய பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(i) (அ) சுருக்கெழுத்தின் வேக வளர்ச்சிக்கு உகந்ததாகப் பயன்படுத்தப்படும் **இரண்டு** முறைகளைத் தருக (01 புள்ளி)

(ஆ) 'உம்' அலகின் ஓசைகள் எத்தனை வகைப்படும்? அவை எவை? (02 புள்ளிகள்)

(ii) (அ) நேர் கோடு, சுழி, வளைகோடு ஆகியவற்றைப் பயன்படுத்தி **இரண்டு** சொற்கள் எழுதுக. (01 புள்ளி)

(ஆ) தொங்கு நிலையில் நீனச் சுழியினைப் பயன்படுத்தி **இரண்டு** சொற்கள் எழுதுக. (01 புள்ளி)

(இ) குறியீட்டின் ஆரம்பத்தில் கீழ்ப்புறம் ஒரு புள்ளியினை இடுதல் வேண்டும் என்ற விதியினைப் பயன்படுத்தி **இரண்டு** சொற்கள் தருக. (01 புள்ளி)

(iii) (அ) தனிக்குறிச் சொற்கள் **இரண்டு** தருக. (01 புள்ளி)

(ஆ) சொற்களின் ஆரம்பத்தில் நீனச் சுழியினைப் பயன்படுத்தி **இரண்டு** சொற்கள் தருக. (01 புள்ளி)

(iv) (அ) நேர் கோட்டின் ஆரம்பத்தில் பக்கம் மாற்றிய சிறிய சுழியினைப் பயன்படுத்தி **இரண்டு** சொற்கள் தருக. (01 புள்ளி)

(ஆ) சுருக்கெழுத்துக் குறியீட்டின் இறுதியில் உம் அலகுடன் 'ஐ' னைப் பயன்படுத்தி **இரண்டு** தமிழ் சொற்கள் எழுதுக. (01 புள்ளி)

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**7.** (i) (அ) அலகுடன் வளைகோடுகள் இணைந்து வரக்கூடிய சொற்கள் **இரண்டு** தருக. (01 புள்ளி)

(ஆ) சுருக்கெழுத்தில் தொங்குநிலையில் நீனச் சுழியினைப் பயன்படுத்தி இரண்டு சொற்கள் தருக. (01 புள்ளி)

(ii) (அ) 'ச்' உடன் 'நீற்' ஒலியினைப் பயன்படுத்தி இரண்டு சொற்கள் தருக. (01 புள்ளி)

(ஆ) சொற்களின் ஆரம்பத்தில் பக்கம் மாற்றிய பெரிய வட்டச் சுழியினை பயன்படுத்தி இரண்டு சொற்கள் தருக. (01 புள்ளி)

(இ) முதலாவது அலகினைப் பயன்படுத்தி **இரண்டு** சொற்கள் தருக. (02 புள்ளிகள்)

(iii) (அ) 'உம்' அலகின் ஓசையினைப் பயன்படுத்தி இரண்டு சொற்கள் தருக. (01 புள்ளி)

(ஆ) சுருக்கெழுத்தில் பக்கம் மாற்றிய ஓசைகள் வரின் பக்கம் மாற்றப்படாது இயல்பாகவே பதியப்படும் என்ற விதியினைப் பயன்படுத்தி இரண்டு சொற்கள் தருக. (01 புள்ளி)

(iv) (அ) சுருக்கெழுத்தில் வேக வளர்ச்சிக்கு உகந்ததாகக் கருதப்படும் இரண்டு முறைகளைத் தருக. (01 புள்ளி)

(ஆ) சுருக்கெழுத்தில் கின்ற - கின்று ஆகிய ஓசைகள் வரின் எவ்வகை அலகுடன் 'ர்' கோட்டினைப் பயன்படுத்தி இரண்டு சொற்கள் தருக. (01 புள்ளி)

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!



PARCEL NO
LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්
PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න